**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(01.11.2023 முதல் 05.11.2023)**

**அறிக்கைஎண் 087/2023** **தேதி.31.10.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 27.10.23 முதல் 30.10.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 33°செ இரவுநேர வெப்பநிலை 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 43 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (27.10.2023 முதல் 30.10.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 05.11.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/10 | 28/10 | 29/10 | 30/10 | தேதி | நாள்-1 01/11 | நாள்-2 02/11 | நாள்-3 03/11 | நாள்-4 04/11 | நாள்-5 05/11 |
| 0.4 | 0.0 | 0.2 | 1.4 | மழை (மி.மீ) | 45 | 15 | 5 | 45 | 40 |
| 33 | 33 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 31 | 31 | 30 | 30 |
| 24 | 24 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 23 | 23 |
| 6 | 6 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 7 | 6 | 6 |
| 74 | 76 | 81 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 84 | 84 | 84 | 82 | 82 |
| 43 | 51 | 66 | 91 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 68 | 68 |
| 11 | 9 | 14 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 8 | 8 |
| 90 | 70 | 70 | 360 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 70 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (01.11.2023 முதல் 05.11.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 68 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **01-11-2023** | 27.0 | 41.0 | 40.0 | 36.0 | 39.0 | 41.0 | 31.0 | 31.0 | 41.0 | 40.0 | 41.0 | 38.0 |
| **02-11-2023** | 9.0 | 17.0 | 15.0 | 12.0 | 12.0 | 13.0 | 11.0 | 11.0 | 14.0 | 17.0 | 16.0 | 11.0 |
| **03-11-2023** | 4.0 | 9.0 | 6.0 | 5.0 | 3.0 | 4.0 | 5.0 | 5.0 | 5.0 | 9.0 | 7.0 | 3.0 |
| **04-11-2023** | 30.0 | 41.0 | 41.0 | 37.0 | 40.0 | 41.0 | 33.0 | 33.0 | 41.0 | 40.0 | 41.0 | 39.0 |
| **05-11-2023** | 28.0 | 37.0 | 36.0 | 34.0 | 36.0 | 37.0 | 31.0 | 31.0 | 37.0 | 37.0 | 37.0 | 35.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் மிதமான முதல் கன மழையுடன் மணிக்கு 8 - 10 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மிதமான முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். பாசனம், உரமிடல் மற்றும் மருந்து தெளித்தலை ஒத்திவைக்கவும். |
| நெல் | வளர்பருவம் | மழை எதிர்பார்க்கப்படுவதால் சமீபத்தில் நடவு செய்யப்பட்ட நெல் வயலில் போதிய வடிகால் வசதி செய்யவேண்டும். |
| கரும்பு | வளர்பருவம் | மழையுடன் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | கன மழையுடன் மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| திராட்சை | வளர்பருவம் | தொடர்ந்து காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதுடன் தூறல் மழையும் இருப்பதால் திராட்சையில் அடிச்சாம்பல் நோய் வர வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் 1 சத மழையில்லா நாட்களில் போர்டோகலவையை தெளித்து கட்டுப்படுத்தலும். |
| மஞ்சள் | கிழங்கு பருக்கும் பருவம் | மழை தொடர்ந்து காணப்படுவதால் எல்லாப் பயிர்களுக்கும் குறிப்பாக மஞ்சள், பருத்தி மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு தக்க வடிகால் வசதி கண்டிப்பாக செய்யவும். மழையில்லா நாட்களில் பயிருக்கு 1 சதம் யூரியா கலவையை தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| கால்நடை | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும்.<br>வரும் நாட்களில் மழையுடன் அதிக காலை மற்றும் மாலை காற்றின் ஈரப்பதம் எதிர்ப்பார்க்கப்படுவதால் மாடுகளுக்கு மற்றும் கோழிகளுக்கு உலர்ந்த தீவனங்கள் கொடுக்கவும்.<br>நிலவும் அதிக ஈரப்பதமான வானிலை மற்றும் $30^0$ செ வெப்பநிலையில் கால்நடைகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட வாய்ப்புள்ளதால் போதிய கதகதப்பினை ஏற்படுத்துவதுடன் சுத்தமான குடிநீரும் வழங்கவும். |

**குறுஞ்செய்தி**

- மிதமான முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். பாசனம், உரமிடல் மற்றும் மருந்து தெளித்தலை ஒத்திவைக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**